மாகாணத் திறைசேரி ~ வடமாகாணம்
Provincial Treasury – Northern Province
පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත

My No:- NP/09/FRM/2011 05.01.2011

**மாகாணத் திறைசேரி சுற்றுநிருப இல: PT/02/2011**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

<u>2010 வரவு செலவு முன்மொழிவுகளின்படி அரசாங்க சேவையின்</u>
<u>சம்பளங்கள் மற்றும் படிகளைத் திருத்துதல்</u>

பொது நிர்வாக அமைச்சின் 28/2010ம் இலக்கமும் 31.12.2010ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேற்படி சுற்றுநிருபத்திற்கமைய முன்மொழிவுகள் முதற்கட்டம் 2011 ஜனவரி முதலாம் திகதியிலிருந்தும், இரண்டாம் கட்டம் 2011 யூலை மாதம் முதலாம் திகதியிலிருந்தும் நடைமுறைப்படுத்தப்படும்.

3. சம்பளங்கள் மாற்றியமைப்பதன் மூலம் வழங்கப்படவேண்டிய மேலதிக சம்பளங்கள் தங்களின் உரிய கருத்திட்டங்களின் சம்பளங்களும் கூலிகளும் எனும் செலவு விடயத்தின் (1001) கீழும் வாழ்க்கைச் செலவுப்படி 1003*01 எனும் செலவு விடயத்தின் கீழும் சாட்டுதல் செய்யப்படுதல் வேண்டும்.

4. மேற்படி திருத்தங்களிற்கமைய 2011ம் ஆண்டிற்கான சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகளிற்கான மேலதிக ஒதுக்கீட்டுத் தேவை மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். மதிப்பீடு செய்யும்போது தற்போது சேவையிலுள்ள ஆளணியினரை மட்டும் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

5. மேலும் மேலதிக நிதி ஒதுக்கீட்டுத் தேவையை முதலாம், இரண்டாம் கட்டங்களிற்கேற்ப இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரிக்கமைவாகத் தயார் செய்து மாகாணத் திறைசேரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட சுற்றுநிருபத்திற்கமைய தங்களது மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அ.மனோரஞ்சன்
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி,
பிரதம செயலாளருக்காக,
வட மாகாணம்.

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா
2. பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொதுநிர்வாகம் - வ.மா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
4. பணிப்பாளர் - மாகாணக் கணக்காய்வு - வ.மா

} தகவலுக்காக



Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.
Phone No. DCS(F) Direct - 026-2226974 General No - 026-3266503
Fax - 026 -2226953 E-Mail – npctreasury@gmail.com

## REVISION OF SALARIES AND ALLOWANCES OF THE PUBLIC SERVICE IN TERMS OF THE BUDGET PROPOSAL 2011

MINISTRY:-.................................................

HEAD:.................................................

PROGRAMME:.................................................

PROJECT:.................................................

| Service level | Number of Staff | Additional requirement by 5% increase of Salary | Additional requirement by increase of COLA | | | | Total Additional Requirement |
|---|---|---|---|---|---|---|---|
| | | | Additional requirement by increase of COLA from 01.01.2011 (Phase 1) | | Additional requirement by increase of COLA from 01.07.2011 (Phase 1) | | |
| | | | No. of Staff | Amount | No. of Staff | Amount | |
| Senior Level | | | | | | | |
| Tertiary Level | | | | | | | |
| Secondary Level | | | | | | | |
| Primary Level | | | | | | | |
| Total | | | | | | | |

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 28/2010

எனது இல:EST-5/1/28(V)
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2010.12.31.

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்.

**2011 வரவு செலவு முன்மொழிவுகளின் படி**
**அரசாங்க சேவையின் சம்பளங்கள் மற்றும் படிகளை திருத்துதல்**

அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட 2011 வரவு செலவு முன்மொழிவுகளின்படி அரச சேவையின் சம்பளங்கள் மற்றும் படிகளை திருத்துவதற்கான முன்மொழிவுகள் இரண்டு கட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். முதற்கட்டம் 2011 சனவரி 01 திகதியிலிருந்தும் இரண்டாம் கட்டம் 2011 யூலை 01 ஆம் திகதியிலிருந்தும் நடைமுறைப்படுத்தப்படும்.

02. முதற்கட்டம் - 2011 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம்

2.1 விசேட படி

அனைத்து அரச அலுவலர்களுக்கும் 2011.01.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வகையில் தாம் பெற்றுக்கொண்டிருக்கும் படிகள் அற்ற அடிப்படையில் மாதச் சம்பளத்தில் நூற்றுக்கு ஐந்தான(5%) ஓய்வூதிய உரித்தற்ற விசேட படியொன்றை செலுத்த வேண்டும்.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல:09/2007 இன் ஏற்பாடுகளின் படி மீள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள ஓய்வு பெற்ற அரச அலுவலர்களும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள அலுவலர்களும் இப் படி பெறுவதற்கு உரித்துடையவர்கள் ஆகார்.

2.2 வாழ்க்கைச் செலவுப்படி

ஆரம்ப மாதச்சம்பளம் ரூபா 22,935/-க்கு குறைந்த சம்பள அளவுத்திட்ட உரித்துடைய பதவிகளில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்காக 2011.01.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வகையில் தற்போது வாழ்க்கை செலவுப்படியாகச் செலுத்தப்படும் ரூபா.5280/- உடன் ரூபா.600/- இனை சேர்த்து ரூபா 5850/- செலுத்த வேண்டும்.

2.3 இலங்கை அதிபர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையின் சம்பளங்கள்

இலங்கை அதிபர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையின் சம்பளங்களின் விடயத்தில் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல:

06/2006(VIII) பந்தி 6 இல் குறிப்பிட்டுள்ள நடைமுறைப்படும் திகதி 2011.01.01 ஆக இத்தால் திருத்தப்படுகிறது. அச் சுற்றறிக்கையின் மற்றைய ஏற்பாடுகள் மாறாது இருக்கும்.

03. இரண்டாம் கட்டம் – 2011 யூலை 01 ஆம் திகதி தொடக்கம்

3.1 2007.08.24 திகதிய 06/2006(IV) இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை படிமுறை அடிப்படையில் சம்பளத்தை மீளமைத்தல்.

2007.08.24 திகதிய 06/2006(IV) இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்களின்படி சம்பள மீளமைப்பு உத்தேச அடிப்படையில் படி முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் நிலுவை சம்பளம் செலுத்தலின்றி 2011 யூலை 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வகையில் உரிய சம்பளப் படிநிலையில் வைத்து சம்பளம் செலுத்த வேண்டும். இது 2011.07.01 ஆம் திகதிக்கு சேவையில் இருந்த அலுவலர்களுக்கு மட்டும் ஏற்புடையதாகும். சம்பள மீளமைப்பு கடிதத்தினை இணைப்பு I குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்க வேண்டும்.

3.2 வாழ்க்கை செலவுப்படி

தொடக்க மாதச் சம்பளம் ரூபா.22935/– வுக்கும் அதற்குக் கூடிய சம்பள அளவுத்திட்டத்திற்கும் உரித்துடைய பதவிகளில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு 2011 யூலை 01 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுப் பெறும் வகையில் தற்போது செலுத்தப்படும் மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியான ரூபா 5250/– உடன் ரூபா 600/– சேர்த்து ரூபா 5850/– ஆக செலுத்த வேண்டும்.

04. வினைத்திறன்காண் தடைகள்

அலுவலர் சித்திபெற வேண்டிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்கு உரிய கால வரையறைகள் மாறாது இருக்கும்.

05. நாட் சம்பளம்

அமய/நாட் சம்பளத்தின் அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு செலுத்தப்படும் வாழ்க்கை செலவுப் படி தவிர்ந்த நாட்சம்பளத்தின் பேரிலான 5% வீதப் படியினை 2011.01.01 ஆம் திகதி தொடக்கம் செலுத்த வேண்டும். இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மேற்படி ஏற்பாடுகளின் கீழ் நாட் சம்பளம் பெறும் ஊழியர்களுக்காக செலுத்தப்படும் வாழ்க்கை செலவுப் படியினை நாளொன்றுக்கு ரூ.195/– ஆக அமையுமாறு திருத்தி 2011.01.01 ஆம் திகதியிலிருந்து செலுத்த வேண்டும்.

06. சீராக்கல் படி

2007.08.24 ஆம் திகதிய 06/2006(IV) இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் படி தற்போது மேற்கொண்டுள்ள சம்பள மீளமைப்புகளின் கீழ் பெற்றுக் கொண்டிருந்த சம்பள ஏற்றங்கள் பெறுமதி குறைந்துவிட்ட அலுவலர்களுக்கு 2008.06.12 ஆம் திகதிய

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 06/2006(V) இன் பந்தி 3.1 இன் மூலம் வழங்கும் சீராக்கல்படியை 2011.07.01 ஆம் திகதி தொடக்கம் முற்றாக நிறுத்த வேண்டும்.

07. பயிலுநர் மற்றும் பயிற்சி பெறுதல் படிகள்

2006.11.10 திகதிய 06/2006(II) இலக்க சுற்றறிக்கையின் பந்தி 14 இல் உள்ளடங்கிய பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள படியில் 5% இன் விசேட படியொன்றை மேற்குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின்படி செலுத்த வேண்டும்.

08. முப்படை உறுப்பினர்கள்

முப்படை உறுப்பினர்களின் விடயத்தில் இச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் கீழ் விசேட படியும் வாழ்க்கை செலவுப் படியும் 2011.01.01 ஆம் திகதி தொடக்கம் செலுத்தப்பட வேண்டும்.

09. ஓய்வுச் சம்பளங்கள்

9.1. முதலாம் கட்டம் – 2011 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம்

ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கை செலவுப்படி.

அரச சேவையின் ஓய்வூதியர்களுக்காக தற்போது செலுத்தப்படும் ரூபா.2375/- ஆன வாழ்க்கை செலவுப்படியுடன் ரூபா.300/-ஐ சேர்த்து ரூபா.2675/- ஐ 2011 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து செலுத்த வேண்டும்.

9.2. இரண்டாம் கட்டம் – 2011 யூலை 01 ஆம் திகதி தொடக்கம்

ஓய்வுச் சம்பளம்:-

2003.12.31 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வுச் சம்பளத்தோடு மாதமொன்றுக்கு ரூபா.750/- யும், 2004.01.01 திகதி தொடக்கம் 2005.12.31 ஆம் திகதி வரையிலான காலத்திற்குள் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வுச் சம்பளத்தோடு ரூபா. 250/- வும் சேர்த்து 2011 யூலை 01 ஆம் திகதி தொடக்கம் செலுத்த வேண்டும்.

10. அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டச் சபைகள்

இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள சம்பள மீளமைப்புக்கள் மற்றும் படிகளை அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட முறையான சபைகள் மற்றும் வெளிநாட்டு மானியங்களின் கீழ் செயற்படும் கருத்திட்டங்களது பணித்தொகுதிகளுக்கு உரியதாகக் கொள்வது தொடர்பில் புறம்பானதொரு சுற்றறிக்கை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும்.

இணைப்பு I

*<u>அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: ............ இன் படி சம்பளங்களை மீளமைத்தல்</u>*

*அலுவலரின் பெயர்:-*
*பதவி/வகுப்பு/தரம்:-*

*மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் உங்களது சம்பளம் பின்வருமாறு திருத்தப்படுகிறது.*

*01.* (அ) அ.நி.சு. 09/2004 இன் படி 2005.12.31 ஆம் திகதிக்கு உரிய சம்பளத்தொகுதி:-
(ஆ) சம்பள அளவுத் திட்டம்:-
(இ) சம்பள ஏற்றத் திகதி:-
(வேறு சுற்றறிக்கை பணிப்புகளின் பேரில் விதிக்கப்பட்ட சம்பளமாயின் உரிய தொடரினை குறிப்பிடவும்)
(ஈ) 2005.12.31 ஆம் திகதிக்கு உரித்தான (சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள) முழுமொத்த சம்பள அளவுத் திட்டம்:- உரிய சம்பளம் ரூபா.
படிநிலை இல:-

*02.* அ.நி.சு. 06/2006 இன் படி
(அ) 2006.01.01 திகதிக்கு உரித்தான: சம்பள குறியீட்டு இல:
சம்பள அளவுத் திட்டம்
நேரொத்த சம்பளப் படிநிலை: உரிய சம்பளம் ரூபா:
(ஆ) 2007.05.31 திகதி பெற்ற சம்பளப் படிநிலை இல: உரிய சம்பளம் ரூபா:

*03.* அ.நி.சு. 06/2006(IV) இன் படி :
(1) 2007.06.01 ஆம் திகதியில் அமர்த்தப்பட்ட
சம்பள குறியீட்டு இல :-
சம்பள அளவுத் திட்டம்:-
படிநிலை இல:- உரிய சம்பளம் ரூபா:
(2) அ.நி.சு.இல: 06/2006 (IV) படி நிலை முறைப்படி சம்பளம் மீளமைக்கப்பட்டிருப்பின் 2007.06.01 ஆம் திகதியில் உரித்தாக வேண்டியிருந்த சம்பளப் படி நிலை இல: உரிய சம்பளம் ரூபா.

| | அ.நி.சு. இல:06/2006 (IV) இன் அறிவுறுத்தல்களின் படி 2007.06.01 அல்லது அதன் பின்னரான திகதியொன்றில் அமைந்த சம்பள ஏற்றங்களை உழைத்துக் கொண்டதன் பேரில் 2011.06.30 வரை அமர்த்தப்பட்டுள்ள சம்பளப்படி நிலைகள் பற்றிய விபரம் | | | அ.நி.சு.இல:06/2006 (IV) இல் குறிப்பிட்டுள்ள சம்பளங்கள் 2007.06.01 அல்லது அதற்கு பின்னராக அமைந்த சம்பள ஏற்றங்கள்ள உழைத்துக் கொண்டதன் பேரில் படிநிலை முறை அடிப்படையின் பேரில் மீள்ளமைக்கப்பட்டபோது 2011.06.30 வரை அமர்த்தப்பட வேண்டி உள்ள சம்பளங்கள் பற்றிய விபரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | சம்பள ஏற்றத் திகதி | சம்பளம் | படி நிலை இல: | சம்பள ஏற்றத் திகதி | சம்பளம் | படி நிலை இல: |
| 01 | 2007.................... | ரூபா....... | ........ | 2007.................... | ரூபா...... | ........ |
| 02 | 2008.................... | ரூபா....... | ........ | 2008.................... | ரூபா...... | ........ |
| 03 | 2009.................... | ரூபா....... | ........ | 2009.................... | ரூபா...... | ........ |
| 04 | 2010.................... | ரூபா....... | ........ | 2010.................... | ரூபா...... | ........ |
| 05 | 2011.................... | ரூபா....... | ........ | 2011.................... | ரூபா...... | ........ |

குறிப்பு:

(2007.06.01 தொடக்கம் 2011.05.31 வரை உயர்வு வழங்குவதன் மூலம் அல்லது வேறு விதத்தில் சம்பள அளவுத் திட்டம் மற்றும் சம்பள ஏற்றத் திகதி மாறியிருப்பின் அதற்குரிய தகவல்களை தரவும்)

04. .......... இலக்க அ.நி.சு. கீழ் சம்பளங்களை மீளமைக்கும் போது அ.நி.சு. 06/2006(IV) இன் சம்பளத்தை படிநிலை முறைக்கு கணிப்பீடு செய்தபின் 2011.07.01 ஆம் திகதிக்கு உரிய நேரொத்த சம்பளப் படிநிலை இல:.

உரிய சம்பளம்:- ரூபா.......................................

<u>குறிப்புக்கள்:</u>

01. 2011.06.30 திகதியாகும் போது உரியதாக இருந்த சம்பள ஏற்றத் திகதி மாறக் கூடாது.

02. இச் செயற்பாட்டின் போது ஒழுங்காற்றுக் காரணங்களின் பேரில் அல்லது/ அத்துடன் வேறு காரணங்களின் பேரில் சம்பள ஏற்றம் கிடைத்திரா திருப்பின் அவ்விடயங்களை கவனத்திற் கொள்ள வேண்டும்.

தயாரித்தவர்(பெயர்) கையொப்பம்
(பதவி) திகதி

சோதித்தவர்(பெயர்) கையொப்பம்
(பதவி) திகதி

பிழையான வகுப்பீட்டின் அல்லது கணிப்பீட்டின் அல்லது வேறு தவறுதல் காரணமாக கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளதென தெரியவருமாயின் அத்தொகைகள் மீள் அறவீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிறுவனத் தலைவர்